பொருட்களில் பூச்சித் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்படி சமயங்களில் அருகில் உள்ள வட்டாரக் கிடங்கு தர அலுவலர்மூலம் பூச்சிக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.ஆகவே, தற்சமயம் பொது விநியோகத் திட்ட கடைகளில் தேவைப்படும் தருணத்தில் பூச்சிக் கட்டுப்பாடு செய்ய வசதி உள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

வன விலங்குகளால் ஏற்படும் இழப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகைகளை உயர்த்துதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கட்தொகைப் பெருக்கத்தாலும், தொழில்மயமாக்கலாலும் வன விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, வன விலங்குகள் அடிக்கடி காடுகளைவிட்டு வெளியேறி, மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால், மனிதர்கள், பயிர்ச்சேதம், உடைமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் வன விலங்குகளால் தாக்கப்படுவதால், மனித உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, வன விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துதல்; அவை விரும்பி உண்ணும் பயிர்களை வனப் பகுதிகளில் வளர்ப்பது; வனங்களின் எல்லைப் பகுதிகளில் தடைகளை உருவாக்குவது; மனித உயிர்களுக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடைமைகளுக்கும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல்திட்டத்தின்மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று 4-8-2011 அன்று இந்த

2011 ஆகஸ்ட் 17] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

வன விலங்குகளால் மனித உயிரிழப்பு ஏற்படும்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ஒன்றரை இலட்சம் ரூபாயிலிருந்து, மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர் இழப்போ அல்லது நிரந்தர ஊனமோ ஏற்படும்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ஒன்றரை இலட்சம் ரூபாயிலிருந்து, மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பயிர்ச் சேதம், உடைமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில், வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகை இதுவரை ஏக்கருக்கு 15,000 ரூபாய் என்ற அளவிலிருந்து, ஏக்கருக்கு 25,000 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படுவதுடன், (மேசையைத் தட்டும் ஒலி) சேதம் அடைந்த தென்னை மரங்களுக்கும், மரத்திற்கு 500 ரூபாய் என்ற அளவில் இழப்பீடு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வன விலங்குகளால், ஓட்டு வீடுகள்/RCC வீடுகள், கூரை வீடுகள் எந்த அளவுக்குச் சேதம் அடைந்தாலும், இதுவரை 5,000 ரூபாய் மட்டும் இழப்பீடாக வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை, இனி, முழுவதும் சேதம் அடைந்த ஓட்டு வீடு/RCC வீடுகளுக்கு 35,000 ரூபாயாகவும், கூரை வீடுகளுக்கு 10,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பெருமளவில் பாதிப்புக்குள்ளான ஓட்டு வீடு/ RCC வீடுகளுக்கு 5,000 ரூபாயும், கூரை வீடுகளுக்கு 2,000 ரூபாயும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு 1,500 ரூபாயும் இனி வழங்கப்படும்.

மேலும், வன விலங்குகளால் ஆடு, செம்மறியாடு, பன்றி போன்ற கால்நடைகள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை அனைத்துக்கும் 1,000 ரூபாய் என்ற வீதத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வந்தது. இனி, அந்தத் தொகை, ஆட்டுக்கு 2,000 ரூபாய் என்ற அளவிலும், செம்மறி ஆட்டுக்கு 1,500 ரூபாய் என்ற அளவிலும், பன்றிக்கு 1,000 ரூபாய் என்ற அளவிலும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கோழி போன்ற வீட்டில் வளர்க்கப்படும்

பறவை இனங்கள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை பறவைக்கு 30 ரூபாய் என்ற அளவில் இருந்த இழப்பீட்டுத் தொகை, இனி பறவைக்கு 100 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படும்.

முற்பகல் 10-05

வன விலங்குகளால் உடைமைகளுக்கு இழப்பு ஏற்பட்டால், உண்மையான இழப்பின் அளவு அல்லது 100 ரூபாய், இவற்றில் எது அதிகமோ, அந்தத் தொகை இழப்பீட்டுத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டது. இனி, வன விலங்குகளால் உடைமைகள் இழப்பு ஏற்பட்டால், 2,000 ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் கல்விக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் கல்விக் குழு ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய, மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன.

சென்னை பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. வி.பி. கலைராஜன் திருமதி ஆர். ராஜலட்சுமி திரு. பு. வெற்றிவேல் திரு. து. முருகேசன் திரு. டி.ஆர்.பி. ராஜா திரு. அ. சவுந்தரராசன்
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	டாக்டர் ச. சுந்தரராஜ் டாக்டர் சி. விஜயபாஸ்கர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. இரா. இராஜேந்திரன் திரு. வி. முத்துக்குமார் திரு. க. பாலகிருஷ்ணன்